(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) விராலிமலையில் விவசாயிகள் கைதுசெய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் தேதியன்று புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் விவசாயிகள் கைது செய்யப் பட்டதால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, சி. பழனிமுத்து, சோ. அழகர்சாமி, ஒ. எஸ். வேலுசாமி, எஸ். சிவசாமி, பொ. உத்திராபதி, க. சுப்பு ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, புதுக் கோட்டை மாவட்டம் விராலிமலைப் பகுதியில் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, அங்கே ஒரு போராட்டம் தொடங்கியுள்ளது. ஆனால் அது முதலில் விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அல்ல. அதிகாரிகள் அங்கு ஏதோ வசூலுக்காகச் சென்ற போது விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் தகராறு ஏற்பட்டு, அதன் காரணமாக விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைதுசெய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று விவசாயிகள் போலீஸ் ஸ்டேஷனை கேரோ செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான பல சம்பவங்கள் அங்கே நடந்து இருப்பதால், இது இந்த அவையிலே விவாதிக்கப்பட வேண்டிய முக்கியமான ஒன்று.

விவசாயிகளிடம் எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்று அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்திருக்கும்போது இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவதன் காரணத்தை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட சம்பவங்களைப்பற்றி எல்லாம் தீர விவாதித்து, நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்கு இந்தச் சபையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசானது விவசாயிகளுக்குக் கொடுத்த பல வாக்குறுதிகளைச் சரியாக அமுலாக்காததன் காரணமாகப் பல இடங்களில் தொடர்ந்து இந்த மாதிரியாக விவசாயிகள் மத்தியில் ஒரு

[திரு. சோ. அழகர்சாமி] [1979 மார்ச் 20

கிளர்ச்சி மனப்பான்மை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கூட அரசாங்கம் அறிவிக்கும்போது இந்தப் பாக்கிக்காக அல்லது கூட்டுறவுக் கடனுக்காக எந்தவிதமான ஜப்தி நடவடிக்கையும் இல்லை என்று சொன்ன பிறகு கூட ஜப்தி நடவடிக்கைக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஏலம் போன்ற காரியங்களில் ஈடுபட்டு, விவசாயிகளுடைய சொத்துக்கள் அவைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் விவசாயிகள் மத்தியில் ஒரு பதட்டமான நிலைமை உருவாகியிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் இங்கே சொல்வதற்கு மாறாக பல காரியங்கள் நடைபெறுகின்றன என்பதே இந்த மாதிரியான கிளர்ச்சிகளுக்குக் காரணமாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல. பல இடங்களில், சேலம், கோவை போன்ற பல்வேறு இடங்களில் விவசாயிகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அரசாங்க அறிவிப்பு வந்த பின்னால் கூட மின்சார துண்டிப்பு இருக்கிறது. ஏற்கனவே துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பு இன்னும் கொடுக்கப்படவில்லை. அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக சேலத்தில் 300, 350 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று சொல்லி, தலைவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இதில் அடங்கியிருப்பதால், இவைகளைப்பற்றி விவாதித்து முடிவு செய்ய, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திலே இந்த விவசாயிகள் பிரச்சனையில் தவறான முறையில் 'ஹாண்டில்' பண்ணுவது பற்றி சொல்லியிருக்கிறேன். இது புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமல்ல. இதைப்போன்று பல்வேறு பகுதிகளிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன. செங்கம் வட்டத்தில் இருந்து எனக்குத் தந்தி வந்திருக்கிறது. மின்சாரம் துண்டிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள் அந்தத் தந்தியில். குளித்தலையில் 49 பேர் அரஸ்ட் என்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி ஒவ்வொரு இடத்திலும் அரஸ்ட் செய்வது இன்றைக்குப் பெரிய பிரச்சனையாகிவிட்டது. இது விவசாயிகளுக்குத்தான் பெரிய பிரச்சனை; உங்களுக்குச் சாதாரணமானதுதான். எந்த இடத்திலாவது அரஸ்ட் இல்லை என்றால் உங்களுக்குத் தூக்கம் வராது.

காசிகுப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டிவல்லார் என்பவர் ஊரில் இல்லாத போது— துக்க காரியமாக வெளியூர் போயிருக்கிறார்— ஜப்தி செய்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் இல்லை என்று சொல்வார். நல்ல வேளையாக இப்போது இங்கே மாட்டிக்கொண்டார்.

அவருடைய மகன் வீரசிங்கம் ஜப்தி செய்யும்போது தடுத்திருக்கிறார். என்னென்ன சாமான்களை ஜப்தி செய்திருக்கிறார்கள் என்றால், சட்டி, பானை, குடம், மாடு, செம்பு போன்றவைகளை எல்லாம் ஜப்தி செய்திருக்கிறார்கள். இது சட்ட விரோதமானது. விவசாயக் காரியங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்களை—மாடு போன்றவைகளை—ஜப்தி செய்வதே சட்டவிரோதமானது. ஆனால் நீங்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். சட்ட விரோதமான காரியம் தான் உங்களுக்கு சட்டப்படியானதாக இருக்கிறது. சட்டப்படியானது என்று விதி இருக்கிறது என்று விதியைச் சொல்வீர்கள். அது உங்கள் விதி. அதைக் கேட்கவேண்டியது எங்கள் விதி; விவசாயிகளின் தலைவிதி.

ஜப்தி செய்யும்போது, குடம், சட்டி, பானை, மாடு, கதவு, செம்பு எல்லாம்—வீரசிங்கம் தடுத்ததால் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். எல்லாம் கொண்டுபோய் விட்டார்கள். இது நடைபெற்றது 1979-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் தேதி அன்று. முதலமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் மனு அனுப்பி இருக்கிறார். எனக்கும் அதில் ஒரு காப்பி அனுப்பியிருக்கிறார்.

[முற்பகல் 10–10]

புதுக்கோட்டை மாவட்டத்தில் கல்லூர் என்ற கிராமத்தில் விவசாயிகளிடத்தில் கெடுபிடி வசூல் செய்வதற்காக அதிகாரிகள் போய் இருக்கிறார்கள். அப்படிப் போகும்போது அங்கே யாரும் கொடுக்கவில்லை. காரணம் என்னவென்றால் கொடுக்க முடியாததால் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுக்க முடியாதவர்களிடம் போய் அதிகாரிகள் தகராறு பண்ணியிருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு பக்கத்தில் வசூல் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் வசூல் செய்ய வேண்டாம் என்று சொல்கிறார்கள். இப்படி இரண்டுவிதமான அறிவிப்புகளைச் செய்வதால் அதிகாரிகளுக்கும் கஷ்டம், கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கும் கஷ்டம். எல்லோருக்கும் கஷ்டம். ஆகவே, வசூல் செய்யச் சென்ற அதிகாரிகளைத் தடுத்தார்கள். இதற்காக புதுக்கோட்டை டி.ஐ.ஜீ. திரு. தேவாரம் அவர்கள் ஆர்ம்ட் ரிசர்வ்டு போலீசோடு அங்கே சென்றிருக்கிறார். இவர் எங்கே சென்றாலும் பெரும் குழப்பம்தான் ஏற்படும். அடிதடி, துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் ஏற்பட்டுவிடும். அது தான் வழக்கம். ஆகவே, அவர் இங்கே ஆர்ம்ட் ரிசர்வ் போலீசுடன் சென்று இருக்கிறார். அதன் பிறகு, 200 பேர்கள் கைது செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது மிகப் பதட்டமான நிலையினை உருவாக்கி இருக்கிறது. ஆனால் சர்க்கார் தருகின்ற தகவலோ தவறான தகவலாக இருக்கிறது. அதாவது அதிகாரிகள் சர்வே பண்ணுவதற்காகத்தான் சென்றார்கள் என்று சொல்கிறார்கள். சர்க்கார் தெரிந்துதான் சொல்கிறதா என்பது அல்லது தெரியாமல் சொல்கிறதா தெரியவில்லை. இதிலே விவசாயிகள் காவல் நிலையத்தைத் தாக்கச் சென்றார்

[திரு. க. சுப்பு] [1979 மார்ச் 20

கள் என்று சொல்வதை விட அவர்கள் ஆடு மாடுகளைப் போல நடத்திச் செல்லப்பட்டார்கள் என்று சொல்வதுதான் சரி. ஆகவே மிகப் பதட்டமான நிலை உருவாகி இருக்கும் இந்தச் சமயத்தில்.

[மணியடிக்கப்பட்டது]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் நீளமாகப் பேசிவிடுவார் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் திரு. மாரிமுத்து, திரு. அழகர்சாமி அவர்கள் பேசுவதுபோல் சுருக்கமாகப் பேசக்கூடாதா ? மணியடித்து உட்காரச் சொல் லும் அளவுக்கு ஏன் பேசுகிறீர்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் அரசாங்கத்திற்குச் சாதகமாகத்தான் பேசு வார்கள்.

இப்போது ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இந்த விராலிமலைச் சம்பவம் மிகப் பதட்டமான நிலையினை உருவாக்கி இருக்கின்ற காரணத்தால் இதைப்பற்றி எல்லாம் நிறையப் பேச வேண்டியிருக்கிறது. ஆனால், பேச முடியவில்லை. ஆகவே, நிறையப் பேசவேண்டி இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இந்தப் பிரச்சனையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசுகின்றபோது மதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்கள் அரசாங்கத்திற்குச் சாதக மாகப் பேசுவார்கள் என்று சொல்வது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரிமுத்து அவர் கள், திரு. சுப்பு அவர்கள் சொல்வதை சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவ ரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலைப் பகுதியில் காததலூர் கிராமத்தில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் அன்று காலை ஒன்பது மணியளவில் நிலங்களை சர்வே செய்துகொண்டிருந்த சர்வேயர்களை சுமார் 200 விவசாயிகள் பணி செய்ய விடாமல் தடுத்திருக்கின்றனர். 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ஆம் நாள் அன்று காலை ஏழு மணியளவில் சர்வேயர் ஒருவர் கொடுத்த புகாரின் பேரில் விராலிமலை காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்று மாலை நான்கு மணியளவில் சுமார் 200 பேர்கள் விராலிமலை காவல் நிலையத்திற்குச் சென்று, மேற்கண்ட வழக்கின் மீது புலன் விசா ரணை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து காவல் நிலைய எழுத் தரை மிரட்டியிருக்கின்றார்கள். இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

1979 மார்ச் 20] [திரு. ச. இராமச்சந்திரன்]

1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் அன்று புதுக்கோட்டை துணைக் காவல் கண்காணிப்பாளர் கிராமத்தில் சோதனை செய்து 16 பேர்களைக் கைது செய்துள்ளார். 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் அன்று இரவு விராலி மலை காவல் நிலையத்தைத் தாக்கும் நோக்கத்துடன் சுமார் 500 பேர்களை விவசாயிகள் திரட்டியுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் போலீஸ் படையுடன் சென்று கூட்டத்தினரைக் கலைந்து போகச் செய்துள்ளார். சென்னை போலீஸ் சட்டம் 30 (2) பிரிவின் கீழ், முன் அனுமதி யின்றி கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த தடைவிதித்து உத் தரவிடப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப் பாளரும், புதுக்கோட்டை சப்-கலெக்டரும் கிராமத்தில் முகா மிட்டு நிலைமைகளைக் கண்காணித்தனர். திருச்சிராப்பள்ளி டி.ஐ.ஜியும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரும் விவ சாயிகள் சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்களது குறைகளைக் கேட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வழக் குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் விவசாயிகள் சார் பாகக்கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்களது கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அமைதியாக ஊர்வலம் ஒன்று நடத்த அனுமதி கேட்டனர். ஊர்வலம் நடத்த அனுமதி கொடுக்கப் பட்டது. மாலை சுமார் ஆறு மணி அளவில் சந்தைப்பேட்டை யிலிருந்து தாசர் தெருவரையில் ஊர்வலமாகவந்து அமைதியாகக் கலைந்து சென்றனர். எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடப்பட்டனர். நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, மேற்கண்ட பொருள் மீது விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்கள் ஜப்தி பண்ணவில்லை என்று சொல்கிறார்கள், அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவைகளை அமைச்சர் அவர்களிடம் கொடுக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

(ஆ) விம்கோ தீப்பெட்டி தொழிற்சாலையில் உற்பத்திக் குறைப்பும், ஆட்குறைப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ''மத்திய அரசு வரி உயர்வு செய்ததினால் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை நிர்வாகம் உற்பத்தியைக் குறைத்து